## ‘எல்லா மாடல்களுக்கும் தலைமை வகிக்கும்

# திராவிட மாடல் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் தான்!’

## `நிறுவனங்களின் நாயகர்’ கலைஞர் கருத்தரங்கில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, நவ. 27**

**எல்லா மாடல்களுக்கும் தலைமை வகிக்கும் திராவிட மாடல் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் என்று ‘நிறுவனங்களின் நாயகர் கலைஞர்’ கருத்தரங்கில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் உரையாற்றினார்.**

சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி, `நிறுவனங்களின் நாயகர்’ கலைஞர் கருத்தரங்கம் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“இந்த மகத்தான நிகழ்ச்சியில் பங்குபெறுவதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைக்குப் பல ஊர்களில் பல மாநிலங்களில் அந்த மாடல் இந்த மாடல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இது எல்லாவற்றையும் விட உண்மையான மாடல், முதன்மையான மாடல் எதுவென்றால், இந்த எல்லா மாடல்களுக்கும்

தலைமை வகிக்கின்ற மாடல் அது எதுவென்றால், அது கலைஞர் அவர்கள் உருவாக்கிய திராவிட மாடல்தான்.

அதை உரக்கச் சொல்கின்ற நிகழ்ச்சியாக, சீரும் சிறப்புமாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக நிறுவனங்களினுடைய நாயகர் கலைஞர் விழாக் குழுவின் தலைவர் அமைச்சர் நேரு அவர்களுக்கும், இணைத் தலைவர்கள் அமைச்சர்கள் ரகுபதி அவர்களுக்கும் அன்பரசன் அவர்களுக்கும், விழாக்குழுவின் உறுப்பினர் செயலர் பொன்னையா மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**`நிறுவனங்களின் நாயகர் கலைஞர்’ நேர்த்தியான அழகான தலைப்பு!**

`நிறுவனங்களின் நாயகர் கலைஞர்’ என்ற தலைப்பே மிகவும் அழகான நேர்த்தியான ஒரு தலைப்பு. முக்கிய மாக இந்த நிகழ்ச்சியின் அழைப்பிதழை பற்றி இங்கு நான் சொல்லியே ஆக வேண்டும். `திராவிட மாடல்’ என்றால் என்ன என்று இப்போது பலரும் கேட்கிறார்கள். அதற்கான பதில் சொல்லும் விதமாகத்தான் இந்த விழாவிற்கான அழைப்பிதழ் அமைந்துள்ளது.

அழைப்பிதழில் நான்கு பக்கங்களில் கலைஞர் அவர்கள் ஆரம்பித்த நிறுவனங்களை இங்கே பட்டியலிட்டு இருக்கிறார்கள். 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தில் ஆரம்பித்து, 2010–ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நூலகம் வரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்துள்ள 41 அரசு நிறுவனங்கள், அந்தப் பத்திரிக்கையில் அச்சிடப் பட்டுள்ளன.

கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது இரண்டு நிறுவனங்களை, கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கி இருக்கிறார்கள். இது மிகப்பெரிய ஒரு சாதனை. இந்தச் சாதனைகளின் தொகுப்பை புகைப் படக் கண்காட்சியாகவும் இங்கே அமைத்துள்ளீர்கள். அதைப் பார்க்கும்போது மிகவும் பிரமிப்பாக இருக்கின்றது. பல முதல் திட்டங்களை, தமிழ்நாட்டிலிருந்து இந்திய ஒன்றியத்திற்குத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முதல் திட்டங்களை மட்டுமல்ல, பல முதன்மையான திட்டங்களைத் தந்தவரும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இதில் எனக்கு ஒரு தனிப்பெருமை என்னவென்றால், தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறைக்கு ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கியதும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

அதேபோலத் திறன் மேம்பாட்டுக் கழகம், மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கியதும், கலைஞர் அவர்கள்தான். இப்போது அந்தத் துறைக்கு எல்லாம் நான் அமைச்சராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்பது, எனக்குக் கூடுதல் பெருமை.

ஒருவருக்கு ஒரு பிரச்சனை என்றால், அதைத் தீர்த்து வைப்பவர் ஒரு நல்ல மனிதராகக் கொண்டாடப்படுவார். ஆனால், அதே மாதிரியான பிரச்சினை எத்தனை பேருக்கு இருக்கிறது மொத்தமாக, எப்படித் தீர்ப்பது என்று சிந்தித்தால் அவர் தான் தலைவர் ஆகிறார்.

**தொழில் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் கலைஞர்!**

அந்த வகையில், தமிழ்நாட்டில் என்னென்ன பிரச்சினைகளுக்கு என்னென்ன நிறுவனங்கள் வந்தால், தீர்வு கிடைக்கும் என்று கலைஞர் அவர்கள் யோசித்ததின் விளைவுதான் இன்றைக்கு தமிழ்நாட்டில் இத்தனை நிறுவனங்கள் இருக்கின்றன. இன்றைக்கு இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்கள் தொழிற்துறையில் செய்த சாதனைகள்தான்.

தொழில் துறையை கலைஞர் அவர்கள் அணுகிய விதம் என்பதே சற்று வித்தியாசமானது. ஒரு முதலாளி தொழிற்துறையைப் பார்ப்பதற்கும் மக்களுக்கான ஒரு தலைவர் தொழில்துறையைப் பார்ப்பதற்கு மிகப்பெரிய ஒரு வித்தியாசம் இருக்கின்றது. அதுவும், குறிப்பாக கலைஞர் அவர்கள் மக்களிடமிருந்து வந்த மக்கள் தலைவர். அதனால்

> **தமிழ்நாட்டில் என்னென்ன பிரச்சினைகளுக்கு என்னென்ன நிறுவனங்கள் வந்தால், தீர்வு கிடைக்கும் என்று கலைஞர் அவர்கள் யோசித்ததின் விளைவுதான் இன்றைக்கு தமிழ்நாட்டில் இத்தனை நிறுவனங்கள் இருக்கின்றன.**

தான் இத்தனை நிறுவனங்களை அரசு கஜானாவை நிரப்புவதற்கு மட்டுமல்லாமல், மக்களுடைய தேவைகளை நிரப்புவதற்கு அந்தக் குறிக்கோளோடு தொடங்கினார்கள்.

இந்தக் காரணத்தால்தான் தமிழ்நாடு வளர்ந்து இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களும் ஒரு நல்ல நிலையில் உயர்ந்திருக்கின்றார்கள்.

ஒரு மனிதனுக்கு மூன்று விஷயங்கள் அத்தியாவசியம் என்று சொல்வார்கள். இருக்க இடம், உடுத்த உடை, உண்ண உணவு இந்த மூன்று தேவைகளையும் பூர்த்திச் செய்ய 1970ஆம் ஆண்டுகளிலேயே இத்தனை நிறுவனங்களைத் தொடங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இருக்க இடம் என்ற தேவையைப் பூர்த்திச் செய்ய தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இன்றைக்கு அது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக மாறி இருக்கிறது. உடுத்த உடை என்னும் தேவையைப் போக்க பஞ்சாலைக் கழகம் மற்றும் மேம்படுத்தப்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், உண்ண உணவு எனும் தேவைக்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் போன்றவற்றை உருவாக்கியவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். குடிசை மாற்று வாரியம் வருவதற்கு முன்பு குடிசைகளில் மழை பெய்தால், தண்ணீர் ஒழுகும். அதுவே, வெயில் அடித்தால் சூடு தாங்காமல் குடிசைகள் எரியும். இந்தக் கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைத்து கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத் தவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு பொங்கலுக்கு, ரேஷன் அட்டை வைத்திருப்பவர்களுக்கு எல்லாம் நாம் பரிசு பொருட்கள் வழங்குகின்றோம். `கோவிட்’ காலத்தில் அவர்களுக்கான உதவித் தொகையை வழங்குகின்றோம்.

தமிழ்நாடு அரசு நினைத் த்தால், ஓர் இரவில் தமிழ்நாடு முழுவதும் பொருட்களைக் கொண்டு செல்ல முடியும் என்றால், அதற்கு முக்கிய



காரணம் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த இந்த வலிமையான பொது விநியோகத் திட்டம். உணவைவிட அடிப்படைத் தேவை ஒன்று இருக்கிறது என்றால், அது குடிநீர்தான்.

**ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்!**

60 வருடங்களுக்கு முன்பு குடிநீர் என்பது, பல கிராமங்களில் குடிநீர் வசதி கிடையாது. ஆறுகளிலும், ஏரிகளிலும்தான் குடிநீர் எடுத்தார்கள், அதுவும் சுகாதாரமாக இருக்காது. கலைஞர் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை உருவாக்கிய பிறகுதான் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் சுத்தி கரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் கொண்டு சேர்க்கப்பட்டது.

தமிழ்நாடு எங்கும் சீரான முறையில் தொழில்வளம் பெருகவேண்டும் என தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்தை 1971ஆம் ஆண்டுத் தொடங்கி வைத்தார் நமது கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பல பரிமாணங்கள் உண்டு. எழுத்தாளர், திரைக்கதை ஆசிரியர், அரசியல் வித்தகர், கவிஞர், பத்திரிக்கையாளர் எனப் பல பரிணாமங்கள் உண்டு.

இதைத்தாண்டி முக்கியமான ஒரு பரிமாணம் என்னவென்றால் தொழில் முனைவோருக்கு எல்லாம் தொழில் முனைவோர்தான் நம்முடைய கலைஞர் என்று சொல்ல வேண்டும்.

குறிப்பாக தொழிற்சாலைகள் என்று வரும்போது மின்சாரம் என்பது மிக மிக அவசியம். தொழிற்துறைக்கான மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில், கலைஞருக்கு இருந்த அந்த உறுதிபாட்டை இரண்டு சம்பவங்கள் வாயிலாக, இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

முதல் சம்பவம், மறைந்த தொழிலதிபர் கருமுத்து கண்ணன் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் இதைக் கூறி இருக்கிறார்.

1996ஆம் ஆண்டுக் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருக்கிறார். தொழிற்சாலைகள் நிறைந்த மேற்கு மண்டலத்தில் மின்வெட்டு. கரண்ட் பிரச்சினை இருக்கிறது. அதனைத் தீர்க்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தொழில் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம் தேதி கேட்கிறார்கள்.

அப்போது பொங்கல். பொங்கல் நேரமாக இருந்தாலும் சரி, கலைஞர், அவர்களை வரச்சொல்லி பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கலன்று மேற்கு மண்டலத் தொழில் முனைவோர்கள் தலைமைச் செயலகத்தில் அவர்களிடம் உரையாற்றினார்கள்.

ஒருவர் மட்டும் ரொம்ப ஆவேசமாகக் கோபமாக கலைஞரிடம் பேசுகிறார். அப்போது கூடியிருந்த சிலர் வெவ்வேறு காரணங்களைச் சொல்லி, அவரை நிறுத்த பார்க்கிறார்கள், தடுக்கிறார்கள்.

**தொழில்துறை மீது கலைஞரின் ஈடுபாடு**

உடனே, குறுக்கிட்ட கலைஞர் அவர்கள் அவர் இடுப்புக்குக் கட்ட துண்டு கேட்கிறார். நீங்கள் ஏன் பட்டுத்துணி பற்றிப் பேசுகிறீர்கள் என்று கலைஞர் அவர்கள் சொல்கிறார்கள். அதாவது அவர் பிரச்சினையோடு வந்திருக்கிறார் அதற்குத் தீர்வு சொல்ல வேண்டுமே தவிர, அவரைப் பேச விடாமல் செய்யக் கூடாது என்று அந்த இடத்தில் முக்கியத்துவம் கொடுத்தார். அந்த அளவுக்குத் தொழில்துறை மீது கலைஞர் அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள்.

இன்னொரு சம்பவத்தையும் நான் இங்கே கூற விரும்புகின்றேன். வட சென்னையில் அனல் மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்ட போது, சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

ஒருவர் கலைஞரை சந்தித்துப் பேசும் போது சொல்கிறார். எங்களுடைய அண்ணாச்சி, வட சென்னையில், `மனம் மகிழ் பூங்கா’ அமைக்க விரும்புகின்றார். எனவே, மின்சார நிலையம் அமைக்க, அங்கே அனுமதி தரக்கூடாது என்று கூறுகிறார். அதற்கு கலைஞர் அவர்கள் சொல்கிறார். உங்கள் அண்ணாச்சி அம்யூஸ்மென்ட் பார்க் அமைக்க விரும்பு கிறார். ஆனால், எங்கள் அண்ணா மின்சார நிலையங்களை உருவாக்கி, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கச் சொல்லியுள்ளார்கள் என்று பதில் கூறி, அந்தத் திட்டப் பணிகளைத் தொடங்கிய வர்தான் நம்முடைய கலைஞர் அவர்கள். இதனை இந்தியா சிமெண்ட் சீனிவாசன் அவர்கள் கலைஞருக்குப் புகழ் வணக்கம் நினைவஞ்சலி செலுத்துகின்ற நிகழ்ச்சியில் குறிப்பிட்டு இருக்கிறார். தமிழ்நாட்டிலேயே முதன்முறை யாக 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில்நுட்பக் கொள்கை கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அதன் பிறகு, ஒட்டுமொத்த ஐ.டி. நிறுவனங்களும் சென்னையை நோக்கி படையெடுத்தன என்பதுதான் வரலாறு. 2000ஆம் ஆண்டு சென்னை `டைட்டல் பார்க்கைத் திறந்து மாபெரும் தொழில்நுட்பப் புரட்சியை, கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள்.

**கலைஞர் உருவாக்கிய தொழில்நுட்ப புரட்சி!**

அது மட்டுமல்ல, ஸ்ரீபெரும்புதூர், எண்ணூர் பகுதிகளில் ஆட்டோமொபைல் தொழிற்சாலைகளைத் தொடங்கி `டெட்ராய்ட் ஆப் ஏசியா’ என்ற பெயரை சென்னைக்குப் பெற்றுத் தந்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் இந்த சாதனைதான் தமிழ்நாட்டை, சென்னையை உலக வரைபடத்தில் முக்கியமான இடத்தைப் பிடிக்கச் செய்துள்ளது.

பண்ணையார்களும், ஜமீன்களும் பஸ் முதலாளிகளாக இருந்த காலத்தில் 1972 ஆம் ஆண்டு பேருந்துகளை நாட்டுடைமையாக்கி, ஏழை, எளிய மக்களின் பயணங்களை எளிமையாக்கியவர் நம்முடைய கலைஞர் அவர்கள். சென்னை வளர வேண்டும் என்றால், அதற்குப் பிறகு முறையான ஒரு களம் இருக்க வேண்டும் என்று 1974ஆம் ஆண்டிலேயே சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தைக் கொண்டு வந்தார்கள்.

இன்றைக்குப் பலரும் மெட்ரோ ரயிலில் பயணிக்கின்றோம். ஆனால், அதனை 20 ஆண்டுகளுக்கு முன்பு 2000 ஆண்டு அதைச் செய்தவர், நம்முடைய கலைஞர் அவர்கள். பொருளாதார மேம்பாடு, சமூக மேம்பாடு இரண்டுக்கும் முக்கியத்துவம் அளித்தவர் கலைஞர் அவர்கள். சமூகத்தில் பெரும்பான்மை மக்கள் மட்டுமின்றி, ஒடுக்கப்பட்ட மக்கள், சிறுபான்மை எண்ணிக்கையில் உள்ள மக்கள், புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக நிறுவனங்களைத் தொடங்கிய ஒரே தலைவர் என்றால், அது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்.

ஆதிதிராவிடர்களுக்காக `ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம்’, சிறுபான்மையின மக்களுக்காக `சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்’, திருநங்கைகள் வாழ்வில் செழிக்க, நலவாரியம் என அமைத்துத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் என்று பல்வேறு தரப்பட்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கி, அதன் மூலம் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றவர் கலைஞர் அவர்கள்.

கல்வி முடிந்தவுடன் பணிக்குச் செல்ல வேண்டும். பணிக்குச் செல்ல வேண்டுமென்றால், தொழிற்சாலைகள் இருக்க வேண்டும். தொழிற்சாலைகள் இருந்தால் மட்டும் போதாது, அந்தத் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர திறன் வேண்டும் என்று கலைஞர் அவர்கள் யோசித்ததின் விளைவாகவே, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 2009ஆம் ஆண்டு கழக அரசால் தொடங்கப்பட்டது.

கலைஞர் அவர்கள் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டத்தையும் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடுத்த கட்டத்திற்கு எடுத்து சென்று கொண்டிருக்கிறார். கலைஞர் அவர்கள் பேருந்தை நாட்டுடமை ஆக்கினார்கள்.

**கலைஞரின் வழியைப் பின்பற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின்**

நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதியைச் செய்து கொடுத்திருக்கிறார். மகளிருடைய பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்தார்கள்.

இன்றைக்கு ஒரு கோடியே 14 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி, மகளிருடைய பொருளாதார உரிமையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள்.

திறன் மேம்பாட்டுக் கழகத்தை, கலைஞர் அவர்கள் ஆரம்பித்தார். இன்று அந்தக் கழகத்திற்கு `நான் முதல்வன் என்ற திட்டத்தை’ அறிமுகப்படுத்தித் திறன் மேம்பாட்டுக் கல்வியை பட்டுத்தொட்டியெங்கும் கொண்டு செல்லும் பணியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கலைஞர் அவர்கள் பற்றிச் சொல்லும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டு பேசுவார், சொல்வார்.

முறைப்படுத்தப்பட்ட எதுவுமே கலை ஆகிவிடும். முறைப்படுத்தப்பட்ட ஓவியம் ஓவியக்கலை ஆகிறது. முறைப்படுத்தப்பட்ட சமையல் சமையல் கலை ஆகிறது. முறைப்படு த்தப்பட்ட கட்டுமானம் கட்டடக்கலை ஆகின்றது. அது போல எதையுமே முறைப்படுத்திச் செய்வதால்தான் என் தம்பியை கலைஞர் என்று நான் அழைக்கின்றேன் என்று பேரறிஞர் அண்ணா அடிக்கடி குறிப்பிட்டு பேசுவார்.

அந்த வகையில், தமிழ்நாட்டின் வளர்ச்சியை முறைப்படுத்தித் தந்த `நிறுவனங்களின் நாயகர்’ கலைஞரின் வழியில் நம்முடைய திராவிட மாடல் அரசு சிறப்போடு செயல்பட்டு வருகின்றது. இந்தப் பயணம் என்றைக்கும் தொடரும்.

இந்த அருமையான நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த நிறுவனங்களின் நாயகர் கலைஞர் விழாக்குழுவுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கரூர் வாசுகி முருகேசன்**
**நவம்பர் 27 (2009)**



கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.

கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.

1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

“பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நானிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய்? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவு வடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!” என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**